Only Tamil News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 01 (15 - 06 - 1991) சனிக்கிழமை ஓசை: 117

## கொழும்பு நோயாளர் மட்டுப்படுத்தப்படுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசினர் வைத்தியசாலைகளிலிருந்து அத்தியாவசிய மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு பஹரகம ஆஸ்பத்திரிகளுக்கு கப்பல் மூலம் அழைத்துச் செல்லப்படும் நோயாளர்களின் எண்ணிக்கையை இனிமேல் மட்டுப்படுத்தப் போவதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த காலங்களில் யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து (6ஆம் பக்கம் பார்க்க)

### பண்பாட்டுச் சிதைப்பிற்கு எதிராக

# 17 வயதில் குண்டேந்தியவர் தலைவர் பிரபாகரன்

## முத்தமிழ் விழா தலைமையுரையில் சுப்பிரமணியன்



(நமது நிருபர்)

'தமிழீழ மண்ணை மீட்பது மட்டும் எமது குறிக்கோள் இல்லை தமிழ்ப்பண்பாடு, நாகரிகங்களைப் பாதுகாத்து தமிழ்க்கலைகளைப் பேணி வளர்ப்பதும் எமது குறிக்கோளாகும். பண்பாட்டுச் சிதைப்பைத் தடுப்பதற்காக பதினேழு வயதிலேயேகுண்டேந்தியவர் எமது தலைவர் பிரபாகரன்.

இவ்வாறு யாழ். முற்றவெளியில் நடந்த எட்டாம் நாள் முத்தமிழ் விழாவில் கலந்து கொண்டு தலைமையுரை ஆற்றிய விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் சுப்பிரமணியன் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் தமிழ் கலைஞர்கள், இலக்கியவாதிகளை ஆதரவு கொடுத்து ஊக்குவிப்பதும் எமது தலைவர் பிரபாகரன் வரிந்து கொண்ட குறிக்கோள்களில் ஒன்று என்பதை இந்த முத்தமிழ் விழா மேடையில் கூறுவதில் நான் பெருமைப்படுகிறேன் எனவும் தெரிவித்தார்.

தமிழரின் பண்பாட்டைச் சிதைப்பதற்காக சிங்கள அரசின் தூண்டுதலுடன் இனத்துரோகி துரையப்பாவினால் எடுக்கப்பட்ட கலியாட்ட (6ஆம் பக்கம் பார்க்க)

## கழிவுநீர் வாய்க்காலில் ஆண் சிசு

(மன்னார்)

மடுவில் உள்ள கழிவு நீர் வாய்க்கால் ஒன்றிலிருந்து இறந்த நிலையில் ஆண்சிசுவின் சடலமொன்று கடந்த புதன்கிழமையன்று வாய்க்காலைச் சுத்தஞ் செய்தவர்களால் மீட்கப் பட்டுள்ளது.

மடு அதிமுக மில் இருக்கும் திருமணமாகாத பெண்ணொருவரே இக் குழந்தையைப் பிரசவித்துள்ளதாகவும், இப்பெண்ணின் பெற்றோரே இச்சிசுவை உயிருடன் கழிவு நீர் வாய்க்காலில் புதைத்துள்ளதாகவும் வைத்திய அறிக்கையின் ஆதாரத்துடன் மேலும் தெரிய வருகிறது.

## கடலில் பயிற்சியின்போது 7புலிகள் விபத்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைக் கடலில் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது ஏற்பட்ட படகு விபத்தில் ஏழு புலிகள் மரணத்தைத்தழுவியுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று நிகழ்ந்துள்ளது. இதில் மரணமடைந்த (6ஆம் பக்கம் பார்க்க)

## 8 ஆம்நாள் முத்தமிழ்விழாவில் கரை கடந்த மக்கள் வெள்ளம்

(யாழ்ப்பாணம்)

டச்சுக்கோட்டையின் சிதைந்த கொத்தளங்கள் பார்வையாளர்களின் தளங்களாக மாறின. நேற்று யாழ் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற எட்டாவது நாள் முத்தமிழ் விழாவிற்கு அலைகடலெனத் திரண்ட மக்கள் வெள்ளம் மைதானத்தின் கரைகளை கடந்து நின்றது. ஒருபகுதி மக்கள் சிதைக்கப்பட்ட யாழ் கோட்டையின் வடதிசையில் காணப்பட்ட அன்னியரின் கொத்தளங்களில் ஏறிநின்றவாறு முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற முத்தமிழ் விழாவை பார்த்து நின்றனர்.

முன்னர் எப்பொழுதும் இல்லாத வகையில் முற்றவெளி மைதானம் சிறப்பாக அலங் (6ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரின் சூட்டிற்கு ஆண்பலி; பெண் காயம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பொதுமக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் தமி (6ஆம் பக்கம் பார்க்க)

### ராஜீவ் கொலையை விசாரிக்க

## இன்டர்போல் உதவியை இந்தியா கோருகின்றது

(டில்லி)

ராஜீவின் மரணம் தொடர்பாக துப்புத்துலக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் விசேட புலனாய்வுப் பிரிவு பிரான்சில் இயங்கும் இன்டர்போல் (சர்வதேச பொலிஸ் அமைப்பு) உதவியைக் கோரியுள்ளது.

சந்தேகநபராக கருதப்படும் பெண்ணை இனம் காணவும் மற்றும் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த பிஜாமா அணிந்த இளைஞனை கண்டு பிடிக்கவுமே விசேட புலனாய்வுக் குழுவானது இன்டர்போலின் உதவியை நாடியுள்ளது.

### கொக்கட்டிச்சோலையில் கொலையுண்டவர்

## சடலங்களை மறைப்பதில் இராணுவம் தீவிர கவனம்

(மட்டக்களப்பு)

கொக்கட்டிச்சோலைப்பகுதியில் இறந்தவர்கள் தொகை நூற்றியெண்பத்தைந்திற்கும் அதிகமாக இருக்கும் என அஞ்சப்படுகின்றது. மேலும் காயமடைந்தவர்கள் தொகையும் இருநூற்றுக்கும் மேல் இருக்கும் எனத் தெரியவருகின்றது.

முன்னர் 166 பேர் கொல்லப்பட்டதாகவும், 150 பேர் காயமடைந்ததாகவும் செய்தி வெளிவந்தது தெரிந்ததே.

அதேவேளை இச்சுற்றிவளைப்பில் இறந்தவர்களில் பெண்களும், குழந்தைகளுமே அதிகம் என்றும் தெரியவருகின்றது. பாதுகாப்புத் தேடி பொது இடங்களில் அவர்கள் தங்கியிருந்தபோதே படுகொலை செய்யப்பட்டனர்.

படுகொலைகள் இடம்பெற்ற கிராமங்கள் இன்ன (6ஆம் பக்கம் பார்க்க)

## கொலைகளை விசாரிக்க ஹமில்டனுக்கு பணிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தினரால் கொக்கட்டிச்சோலையில் 166 தமிழ் மக்கள் கோரக்கொலை செய்யப்பட்டதை விசாரணை செய்யுமாறு இராணுவத் தளபதி (6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகம்உட்பட7மாநிலங்களில் இன்றுவாக்குப்பதிவு

(டில்லி)

இன்று இந்தியாவில் மூன்றாம் கட்ட வாக்களிப்புகள் நடைபெறவுள்ளன. இதில் தமிழகம் உட்பட ஏழு மாநிலங்களிலும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் வாக்குப்பதிவு நடைபெறும்.

பதினெட்டுக் கோடியே அறுபது லட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் 186 மக்கள் அவை பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவுள்ளனர்.

இதே நேரம் தமிழகத்தில் 232 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும், புதுச்சேரியில் 30 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும், உத்தரப் பிரதேசத்தில் 213 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் இன்று வாக்குப்பதிவு இடம்பெறும்.

லோக் சபாத் தேர்தலில் வாக்குப் பதிவு நடைபெறும் தொகுதிகளின் விபரம் தமிழகம் 39, புதுச்சேரி 1, ஆந்திரப் பிரதேசம் 25, குஜராத் (6ஆம் பக்கம் பார்க்க)

சிந்துகின்ற செங்குருதி மண்ணில்
சிதையாமல் சிந்தனைக்கு உரமாய்
பைந்தமிழில் புதிய பண்புகட்கே படியாய்
விதையாமல் இல்லை வீங்கு அறுவடைகள்
பூந்தண்புவியில் புலி ஆளும் நாளுக்கு
நாங்கள் விழித்து நாளும் புகழ்சேர்ப்போம்.

யாழ். மாவட்ட கூட்டுறவாளர்கள்

## வரி விளம்பரம்

**மணமக்கள் தேவையா?**

எம்மிடம் மணமக்கள் பலர் இருக்கிறார்கள். ஞாயிற்றுக் கிழமையில் சந்திக்கவும். மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம் யாழ்ப்பாணம்.
(R/ 1461)

**தேவை**

சவுக்கு விதை தேவை.
- மில்க்வைற், யாழ்ப்பாணம்.
(B / 2670)

# சிரமதானத்திற்கு இலவச உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள சிறிய குளங்களை சிரமதானம் மூலம் திருத்தி அமைக்க முன்வரும் தொண்டர்களுக்கு இலவச உணவு விநியோகத்தை மேற்கொள்வதற்கு யாழ். செயலகம் தீர்மானித்துள்ளது.

இம் மாவட்டத்தில் உள்ள சுமார் 700 சிறிய நடுத்தரக் குளங்களை விவசாய சேவைகள் திணைக்களமும், இவற்றுடன் தொடர்புடைய ஏனைய சில திணைக்களங்களும் சிரமதான முறை மூலம் திருத்தி அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இத்திருத்த வேலைகள் தொடர்பாக இடமிடல் வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. விரைவில் திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்படும்.

இத்திருத்த வேலைகளை பூரணமாக்குவதால் குடாநாட்டின் நன்நீர் சமநிலையை தொடர்ந்து பேண முடியும் என்று நீரியல் பொறியியலாளர்கள் கருத்துத் தெரிவித்தனர். (க)

# குடியேற்றம் நடந்தால் உதவி நிறுத்தப்படும்

## இஸ்ரேலுக்கு அமெரிக்கா எச்சரிக்கை


(லண்டன்)

பலஸ்தீனத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இஸ்ரேலியர்களை குடியமர்த்துவது கைவிடப்பட்டால், அன்றி மேலும் சோவியத் யூதர்களைக் குடியேற்றுவதற்கு தாம் உதவி செய்யப் போவதில்லை என அமெரிக்க அதிபர் புஷ் கூறியுள்ளார்.

இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் டேவிட் லிவியும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கரும் பலஸ்தீனத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் யூதர்கள் குடியேற்றப்படுவது குறித்து எழுந்துள்ள கருத்து வேறுபாடுகள் குறித்து பேச்சுக்கள் நடாத்தி வருகின்றார்.

இந்த உதவி மறுக்கப்பட்ட போதிலும் இஸ்ரேலியப் பிரதமர் ஷமீர் தமது அறிக்கையில் யூத குடியிருப்புக்கள் உருவாக்கப்படுவது நிறுத்தப்படமாட்டாது என்று கூறிவிட்டார். அமெரிக்கர்கள் உதவி செய்யமாட்டார்கள் என்பதை தம்மால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை என ஷமீர் ஆச்சரியம் தெரிவித்துள்ளார்.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 31 - 05 - 1982

அநியாய இழப்பில் 15 - 06 - 1990

### சோமசுந்தரம பிரபாஹரன் (ஹரன்)

(நாவலர் பாடசாலை மாணவன்)

மண்ணிறனில் நீ வந்து மகிழ்வுதந்த நாள்தனை
நாம் — இன்று
எண்ணி நாள்தொறும் நின்றிதியும் வந்ததனை
என்னவென்று சொல்லி எம் இதயமதை ஆற்றுவது?
கண்ணில் நீர்சுமந்து, காட்சிகளை மனம் இருத்தி
— வாழுமெம்
காலமது இருக்குமட்டும் காவியமாய் வாழ்ந்திடுவாய்!
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

திரு. சோமசுந்தரம், நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

அம்மா, அப்பா, அண்ணன்மார், தங்கை, மற்றும் உற்றார், உறவினர்கள்.

(B-2678)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### செல்வி கௌசல்யா - கணேசன்

மண்ணக வரவு 05.07.1969

விண்ணக விரைவு 15.05.1991

அன்பு மகளாய் பாசமுள்ள சகோதரியாய்
எம் இதயத்தில் உறவாடி மகிழ்ந்த எம்
கௌசியே - எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும்
உன் பிரிவால் நினைவலைகள் எம் இதயத்தில்
என்றென்றும் இழையோடும்.

உன் ஆத்மாவின் சாந்திக்காக தினமும்
இறைவனை வேண்டுகிறோம்,

"செந்தாரகை"
வட-அல்வாய்
(R/1457)

அம்மா, அப்பா, சகோதர, சகோதரிகள் உறவினர், நண்பர்கள்.

# நினைவு கூருகின்றோம்...

## 1991-06-15

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னாரில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 18 தமிழர்கள்

1986 ஆம் ஆண்டு தங்கவேலாயுதபுரத்தில் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரமரணமெய்திய

**கல்கி** (சாமித்தம்பி குமாரனந்தன் - காரைதீவு 01)

1987ஆம் ஆண்டு குரும்பசிட்டி மினி இராணுவமுகாம் மீதான தாக்குதலின் போது வீரமரணமெய்திய

**குமரிநாடன்** (சிறிரங்கம் விஜயபாலன் - முழங்காவில்)

**லெப். மதி** (இராசையா சிறிபத்மநாதன் - மானிப்பாய் வடக்கு)

**2ஆம் லெப். வின்சன்** (தியாகராஜா ஞானகுமார் - கரணவாய்தெற்கு)

**தேவன்** (சற்குணராசா தேவராசா - வடலியடைப்பு)

**மஜீத்** (வரதராஜன் மங்களேஸ்வரன் - சுழிபுரம்)

**சிக்கந்தன்** (சின்னத்தம்பி சேனாதிராசா பாஸ்கரன் - பாஸ்கரன் வீதி, கொக்குவில் கிழக்கு)

1990 ஆம் ஆண்டு மூதூர் இலக்கந்தையில் சிறிலங்காப் படைகளுடனான நேரடி மோதலின் போது வீரமரணமெய்திய

**ஜெகன்** (ஆப்தீன் முகமட்யூசுப் - குச்சவெளி, திருக்கோணமலை)

மன்னாரில் சிறிலங்காப்படை முகாம் மீதான தாக்குதலின் போது வீரமரணமெய்திய

**புலோமின்** (தெய்வேந்திரன் - அட்டையடம்பன்)

மாங்குளத்தில் சிறிலங்காப் படையினரின் உலங்கு வானூர்தியின் தாக்குதலினால் வீரமரணமெய்திய

**2ஆம் லெப். கணேசமூர்த்தி** (இராமசாமி சிவபெருமான் - சாளம்பைக்குளம், வவுனியா)

மாங்குளம் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த

**றெஜி**

சிறிலங்காப் படைகளுடனான மோதலில் வீரமரணமெய்திய

**பசிலன்** (ப. புஸ்பநாதன் - வெல்லாவெளி, மட்டக்களப்பு)

**டெனி/சித்தப்பா** (சின்னத்தம்பி கனகசுந்தரம் - வாழைச்சேனை)

**ராமு** (முத்தையா சபேசர் - வவுனியா)

மூதூரில் சிறிலங்காப் படையினரின் பீரங்கித் தாக்குதலினால் உயிரிழந்த 3 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/ 2678)

# யாழ்நகரில் முத்தமிழ் விழாவின் முக்கிய நிகழ்ச்சிகள்

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் நடாத்தும் முத்தமிழ் விழாவின் ஒன்பதாம் நாளான இன்று தமிழீழத்தின் தலைசிறந்த பாடகரான சங்கீத பூஷணம் திரு. எஸ் பத்மலிங்கத்தின் இசைக்கச்சேரி இடம்பெறுகின்றது. பல்லாயிரக்கணக்கான மக்களின் அபிமானத்தைப்பெற்ற இந்தப் பாடகரின் இசை நிகழ்ச்சி இன்று முற்றவெளி மாவீரர் கலையரங்கில் பண்ணிசையுடன் கலந்து மக்களின் செவிகளில் நாதவெள்ளமாகப் பாயப்போகின்றது.

முத்தமிழ் விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியில் இடம்பெற்ற பட்டிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்பட்ட வழக்கு இன்று முற்றவெளி மாவீரர் அரங்கில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

வித்துவான் சி குமாரசாமி திரு. க. சொக்கலிங்கம், திரு. க. சிவராமலிங்கம் ஆகியோரை நீதிபதிகளாகக் கொண்ட இந்த நீதிமன்றில் கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் கலாநிதி நா. சுப்பிரமணியன், திரு. சி. சிவலிங்கராசா, திரு. பொன். கணேசமூர்த்தி ஆகியோர் வழக்குத் தொடுப்போராகவும், எதிர்ப்போராகவும் வாதிடுகின்றனர். திரு புலவர் ஈழத்துச் சிவானந்தன் மானிப்பாயில் நடைபெற்ற கீழ் மன்றில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி என்ற ரீதியில் இம்மன்றினில் விசாரணை செய்யப்படவுள்ளார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இன்றைய நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுகின்றார்.

தெல்லிப்பளை ம.நோ. கூட்டுறவு சமாசத்தினர் வழங்கும் 'சகுனியர் மூவர்' என்ற நாடகம் இன்று மேடையேற இருக்கின்றது. பலரின் பாராட்டுதலைப் பெற்ற இந்த நாடகம் தமிழீழத்தின் நாடகத்துறை வளர்ச்சியினைச் சுட்டி நிற்கும் என்று பேசப்படுகிறது.

## நவம்பர் 12 இல் வரவுசெலவு திட்டம்

(கொழும்பு)

1992 ஆம் ஆண்டிற்கான புதிய வரவு செலவுத் திட்டத்தினை நவம்பர் மாதம் 12 ஆம் திகதி சிறிலங்காப் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

## மாமனிதர்

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சனசமூக நிலையம், வண்ணைக் கலைவாணர் நாடக மன்றம் மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றம் ஒறியன்ஸ் ஸ்போட்ஸ் கிளப் போன்ற சமூக நிறுவனங்களுடன் தன்னை ஐக்கியப்படுத்திப் பணியாற்றிய அரசரது நாடக அரங்கக் கல்லூரியுடனான பங்களிப்பு ஒரு முக்கிய கட்டம் எனலாம். ஸ்தாபக உறுப்பினர்களுள் ஒருவரானதுடன் நாடகப் பட்டறைகளில் கலந்து கொண்டு; உலக நாடகப் போக்குகளை அறிந்து கொண்டார். நாடக அரங்கக் கல்லூரித் தயாரிப்புகளில் நடிகராக, ஒப்பனையாளரா, வேட உடுப்பு மேடை விதானிப்பாளராக, நெறியாள்கை ஆலோசகராக பணிபுரிந்தார். நா. சுந்தரலிங்கத்தின் 'அபசுரம்' நாடக நடிப்பு குறிப்பிடத்தக்கதொன்று. மௌனகுருவின் 'சங்காரம்' க. சிவஸின் 'பொறுத்தது போதும்' குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'கூடி விளையாடு பாப்பா' போன்றவற்றில் வேட உடுப்புகள் விதானிப்பாளர் ஒப்பனையாளர் ஆகக் கடமையாற்றினார்.

ஒளிப்படவியலை செல்லையா ஸ்ருடியோ வில் பிலிப் நிக்கலஸைக் குருவாகக் கொண்டு பயின்ற பின் சொந்தமாக "ஜீவா ஸ்ருடியோ" நடாத்தும் கலைஞர் அரசு, கலாவினோதன் சின்னமணி கணபதிப்பிள்ளையின் வில்லுப் பாட்டுக் குழுவில் பக்கப் பாட்டுக் கலைஞனாக மிளிர்ந்து சிங்கப்பூர், மலேசியா வரை தனது திறமையை நிலைநாட்டினார். ஈழத்துத் திரைப்படங்களான 'குத்துவிளக்கு' 'கடமையின் எல்லை' 'டாக்ஸி டிறைவர்' ஆகியவற்றில் நடித்ததோடு, ஓவியரும் சிற்பியுமான ரமணி மற்றும் அன்ரன் ஆசிரியர் ஆகியோருடன் இணைந்து தியாகி சிவகுமாரன் சிலை, மேலைப் புலோலியூர் சதாவதானி கதிரவேற்பிள்ளை, பருத்தித்துறை புத்தளை கந்தமுருகேசனார் ஆகியோரது சிலைகள் உருவாக்கத்திலும் ஈடுபட்டார்.

கலைப்பணியுடன் அவரது நேர்மை மிக்க உண்மை அரசியல் பணி காலத்தால் கணிக்கப்பட வேண்டிய ஒன்று. 1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது தனி ஒருவனாக இராணுவ ஜீப்பின்முன் நெஞ்சு நிமிர்த்தி கிடந்தவர். மூன்று இராணுவ துப்பாக்கிகள் குறி பார்க்கவும் அஞ்சாது வீரம் காத்த அரசர் ஒரு வேதாந்த சித்தாந்த அறிவு மிக்கவர். புராண, இதிகாச நாட்டார் இலக்கிய பரிச்சயம் உடையவர். அன்பர்களுடனும், உறவினர்களுடனும் அன்புடன் பழகும் அரசய்யா பெருங்கலைஞரும் முறைசார் கல்வி கற்காத மேதையாக, தமிழ் மக்களின் அரசியல் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் மாபெரும் மனிதராக நம் மத்தியில் வாழ்கிறார்

— கந்தையா ஸ்ரீகணேசன்

## தமிழின் சிறப்பு

தமிழினின் சிறப்புக் காணத்
    தந்திடும் பெருவிழா இதாகும்
தமிழினின் சிறப்பு ஒன்று
    தாங்கிய பெயரா யாகும்
அமிழ்தென இனிக்கும் தன்மை
    அறிந்திடின் அதுவும் ஆகும்
இமியுமே தவறி டாமல்
    எளிமையாய் எழுதிப் பேசும்

தனித்துமே இயங்கி நிற்கும்
    தன்மையைக் கொண்ட தாகும்
மனிதனின் தோற்றம் தொட்டு
    வாழ்ந்திடும் தொன்மை காணும்
தனியொரு சுழியைக் கொண்ட
    தன்மையை உடைய தாகும்
இனியதோர் எழுத்து 'ழ'கரம்
    இங்குதான் உண்டு பாரும்

சொல்லிலே சிறப்புக் கொண்ட
    சுந்தர மொழியே யாகும்
நல்லதோர் ஒலியின் சிறப்பு
    நாட்டியே நிற்ப தாகும்
கல்லையே கனிய வைக்கும்
    கவிதையே சிறப்ப தாகும்
பல்கலை உடைய தாகப்
    பாரிலே உயர்ந்து நிற்கும்

மருத்துவச் சிறப்பும் உண்டு
    மகிழ்வுடன் வாழ்வ தற்கு
விருந்தது இசையே யாகும்
    விரும்பியே ஏற்றார் மக்கள்
அருந்திடும் கனியைப் போலே
    அனைத்துமே இயலும் கூத்தும்
பொருந்திடும் இலக்கணம் சொல்லிப்
    போற்றினர் தமிழைத் தானே.

— வ. யோகானந்தசிவம்


மானிப்பாய்

## புனித அந்தோனியார் ஆலய ஆண்டு விழா

16.06.1991

15.06.1991 நற்கருணை தினம்

மாலை 4-15 மணிக்கு வழிபாடுகள் ஆரம்பமாகும்

16.06.1991 புனித அந்தோனியார் தினம்

திருப்பலி காலை 5-45 மணி

திருவிழா திருப்பலி காலை 7-15 மணி

திருச்சுருபப்பவனி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஆலய பரிபாலகர்
புனித அந்தோனியார் ஆலயம்
மானிப்பாய் (R-1455)


விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகத்தினர் நடாத்தும்

# முத்தமிழ் விழா

## ஒன்பதாம் நாள் நிகழ்ச்சி நிரல்

இடம்: யாழ்ப்பாணம் முற்றவெளி
'மாவீரர் கலை அரங்கம்'

நாள்: 15 – 06 – 1991 சனிக்கிழமை

நேரம்: பிற்பகல் 5. 30 மணி

★ மங்கள இசை :
நாதஸ்வரம்: திரு. எம். பி. பாலகிருஷ்ணன்
திரு. ஆர். கேதீஸ்வரன்
தவில்: திரு. ஏ. பாலசுதந்திரன்
திரு. ரீ. உதயசங்கர்
திரு. பி. முருகதாஸ்

★ விடுதலைப் புலிகளின் திறப்புரை.

★ சிறப்புரை: சிவத்தமிழ்ச்செல்வி
பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி

★ மேன்முறையீட்டு வழக்காடு மன்றம்
முதல்நாள் பட்டி மன்றத் தீர்ப்பை
எதிர்த்து வழக்கு

நீதிபதிகள்: வித்துவான் சி. குமாரசாமி
திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்)
திரு. க. சிவராமலிங்கம்

1. பாதிப்புற்ற அணி மேல்முறையீடு
2. வென்ற அணி விளக்கம்
3. பட்டிமன்ற நடுவர் தீர்ப்புக்கான விளக்கம்
4. வழக்குத் தொடுப்போர் வாதம்
   தொடுப்போர்: திரு இ ஜெயராஜ்
   திரு. சி சிவலிங்கராஜா
5. எதிர்ப்போர்வாதம்
   எதிர்ப்போர்: கலாநிதி நா சுப்பிரமணியன்
   திரு. பொன். கணேசமூர்த்தி

★ இசைக்கச்சேரி

| | |
|---|---|
| திரு. எஸ். பத்மலிங்கம் | - பாட்டு |
| செல்வன் பா. கண்ணன் | - வயலின் |
| திரு எம் சிதம்பரநாதன் | - மிருதங்கம் |
| செல்வன் கே கண்ணதாசன் | - கடம் |

★ நாடகம்
தெல்லிப்பளை மகநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர்
வழங்கும்
நாட்டிய நாடகங்கள் "தலைவனைத் தேடி"
"சகுனியர் மூவர்"

# லண்டன் மாநாட்டிற்கு கொர்பச்சேவிற்கு அழைப்பு

(லண்டன்)

லண்டனில் யூலை 17 ஆம் திகதி நடைபெற இருக்கும் ஏழுதொழில் வள மாநாட்டில் சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவும் கலந்து கொள்வதற்கு முறைப்படி அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது என்று பிரித்தானிய பிரதமர் ஜோன்மேயர் அறிவித்துள்ளார்.

லண்டனில் நேற்று முன்தினம் பொதுச்சபையில் இதனை ஜோன் மேயர் அறிவித்தார். உச்சி மாநாடு நடந்து முடிந்த பிறகு நடக்கும் அலுவல் கூட்டத்தில் ஏழு தொழில் வளநாடுகளின் தலைவர்களை கொர்பச்சேவ் சந்தித்துப் பேசலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

# பல்நாட்டு விசாக்களுடன் 3 இலங்கைத் தமிழர் கைது

(சென்னை)

சென்னையிலுள்ள சூளைமேட்டுப் பகுதியில் மூன்று இலங்கைத் தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்

சந்திரசாமி, மகேந்திரன், பாலசுந்தரம் ஆகிய இந்த மூன்று இலங்கைத் தமிழர்களும் போலிக் கடவுச் சீட்டுக்கள், விசா முத்திரைகள், (ஸிலிப்ஸ்) கடவுச்சீட்டு குடிவரவு முத்திரை ஆகியவற்றை வைத்திருந்த போது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் போலி சிங்கப்பூர் கடவுச்சீட்டுகளும் நேபாளம் சுவீடன், நோர்வே கனடா ஆகிய நாடுகளுக்கான போலி விசாக்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

# நட்சத்திர ஹோட்டலில் இரகசியத் தகவல் கோப்பு

(கொழும்பு)

கொழும்பில் ஹோட்டல் ஒன்றிலிருந்து முக்கியமான தகவல்களடங்கிய கோப்பு ஒன்றைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றை விசேட பொலிஸ் பிரிவு சோதனையிட்டபோது ஹோட்டலில் குறிப்பேடு ஒன்று பொலிஸார் வசம் சிக்கியுள்ளது. இதில் சில ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி முக்கியஸ்தர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் சிலரின் பெயர், விலாசங்கள் காணப்பட்டன. இவர்கள் கசினோ முதலாளிகளிடமிருந்து 'சந்தோஷம்' பெறுபவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, கொழும்பில் பல பிரபல்யமான ஹோட்டல்களில் கசினோ விளையாட்டுக்களைப் பிடிக்கக் காரணமாகவிருந்த உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் வெளியிடத்திற்கு மாற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.



## இயல் இசை நாடகம்
## இனிவுறவாழ்த்துகிறோம்



தமிழுக்கு அமுதென்று பெயர்
தரமான சேவைக்கு

# இளந்தென்றல்

பெயர்

உங்களுக்குத் தேவையான

★ கறுப்பு - வெள்ளை புகைப்படங்கள்
★ கலர் புகைப்படச் சுருள்கள்
★ ஒலிப்பதிவு நாடாக்கள்
★ கமரா பற்றரிகள்
★ சிறிய பெரிய அளவிலான அல்பங்கள்
★ விரும்பிய அளவிலான போஸ்டர் பிரதிகள் போன்றவற்றை பெற்றுக் கொள்ளவும்

உங்கள் இல்லங்களில் நிகழும் வைபவங்களை
உயிரோவியமான முறையில் கலர்ப்படங்களாக்கிடவும்
நாடுங்கள்

## இளந்தென்றல்

படப்பிடிப்பாளர்
இல. 14, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

(B-2672)



## கேள்விப்பத்திர அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

### சீர் உடை துணிகள் வழங்கல்

500 மீற்றர் சாம்பல் நிற பொலியெஸ்டர் (Gray) சூட்டிங் துணிகள் வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விகள் பின்வரும் நிபந்தனை ஒழுங்கமையக் கோரப்படுகின்றன.

1. ரூபா 150க்கு மீளளிக்கப்படாத வைப்புப் பணத்திற்கு ரூபா 150/-க்கான மணி ஆடர் / போஸ்டர் ஆடர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. 6'' X 6'' நீள அகலமுடைய மாதிரி துணி இணைக்கப்படல் வேண்டும்.

3. தெரிவு செய்யப்படும் கேள்விப்பத்திரதாரர் கட்டளை வழங்கிய திகதியிலிருந்து 3 வாரத்துள் துணிகளை வழங்குதல் வேண்டும்.

4. வழங்கலின் பின்னரே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் கவரிலிடப்பட்டு 'சீருடை துணிகள் வழங்கலுக்கான கேள்விகள்' எனக் குறிப்பிட்டு நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என முகவரியிடப்பட்டு அவருக்கு 5-7-91ம் திகதியன்று காலை 10-00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் படியாக பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ கையளிக்கப்படல் வேண்டும். கேள்விகள் அதே தினம் காலை 10-30 மணிக்கு திறக்கப்படும்.

(B - 2658 — பதிவாளர்





யாழ் மீட்டு பெற்ற நகரதனில்
முத்தமிழிற்கு முடி சூட்டும் வேளைதனில்
உதித்திடும் சுவையருவி
முத்தமிழும் எத்திக்கும் எட்டட்டும்
புலிகளின் தீரம் தொடரட்டும்
தமிழன் வீரம் துலங்கட்டும்
சுதந்திர தமிழீழம் மலரட்டும்
என வாழ்த்துகின்றது.

தீந்தமிழ் செவிக்கினிது
மலையருவி கண்ணிற்கினிது
"சுவையருவி" உணவுகள் நாவிற்கினிது
எமது சேவை மனதிற்கினிது.



## தமிழீழ மக்களே வருக! வருக!
## உளமும் நாவும் இனிவுற வருக! வருக!
## என வரவேற்கின்றோம்.

சைவ அசைவ உணவிற்கும் குளிர்பான வகைகளிற்கும்

# சுவையருவி

இல. 5, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(B /2671)

■ சிந்தனைக்கு ■

விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெமை எதிர்த்திட்டாலும்
சுதந்திர தேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே

— சுப்பிரமணிய பாரதியார்

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15.06.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 023-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 65

# அரசாங்க அறிக்கையும் ஆணைக்குழு தீர்ப்பும்

கொக்கட்டிச்சோலைப் பகுதியில் பெரியதொரு இனப் படுகொலையைச் சிறிலங்கா இராணுவத்தினர் இரு தினங்களுக்கு முன்னர் நடத்தி முடித்துள்ளனர். அத்தோடு நானூற்றிற்கும் மேற்பட்ட வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. முதலாவது படுகொலை 1987 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

சிறிலங்கா இராணுவத்தினரின் இனப்படுகொலை நடவடிக்கைகள் புதியதொரு விடயமல்ல. இராணுவ வெற்றி ஈட்ட முடியாத நிலையில் இனப்படுகொலைகள் மேற்கொள்வது வழமையான நடவடிக்கையேயாகும். ஆனால், முன் எப்பொழுதும் இல்லாதது போன்று மிக அவசரமாக இப்படுகொலை தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. இவ்வறிவிப்பு நீதியின்பால் உள்ள பற்றுதலால் ஏற்பட்டதல்ல. சிறிலங்கா அரசாங்கத்தின் மீது மனித உரிமை மீறல் தொடர்பான பலத்த கண்டனம் எழுந்துள்ளமையும், அதன் காரணமாக சிறிலங்காவிற்கான நிதியுதவி பாதிக்கப்படுமா என்ற நிலையுருவாகியுள்ளமையுமே இந்த அவசரத்திற்குக் காரணமாகும். ஆனால் இவ் விசாரணைக்குழுவின் தீர்ப்புக்கள் வெறும் கண்துடைப்பு ஆகும் என்பதில் ஐயம் கொள்ளத்தேவையில்லை.

இவ் விசாரணைக் குழுவின் தீர்ப்பை தற்பொழுதே சந்தேகத்திற்கு இடமின்றி குறிப்பிடலாம். விடுதலைப் புலிகள் மனிதக்கேடயமாக மக்களைப் பாவித்துத் தாக்குதலை மேற்கொண்டதாகவும், அப்பொழுது இராணுவத்தினர் தற்பாதுகாப்பு நடவடிக்கைக்காக மேற்கொண்ட தாக்குதலின் போதுதான் இக்கொலைகள் இடம்பெற்றதாகவும், வீடுகள் எரிந்ததாகவும் தெரியப்படுத்துவதோடு, புலிகள் யார், மக்கள் யார் என அடையாளம் காணமுடியாதபடியால் இக்கொலைகள் இடம்பெற்றன எனவும் தெரிவிக்கப்படலாம்.

இந்த ஆணைக்குழுவின் தீர்ப்பு எவ்வாறிருக்கும் என்பதற்கு பெரியதொரு ஆய்வு தேவையில்லை. கடந்தகால ஆணைக்குழுக்களின் அறிவிப்பையும், சம்பவம் தொடர்பான அரசாங்கத்தின் அறிவிப்பையும் கொண்டே கூறிவிடலாம்.

இரு தினங்களுக்கு முன்னர் நடந்த கொக்கட்டிச்சோலை படுகொலைகள் புலிகள் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்தியதனால் நிகழ்ந்தது என தனது வழமையான பாணியிலேயே சிறிலங்கா அரசாங்கம் தெரிவித்துவிட்டது. இது விசாரணைக்கு முந்திய தீர்ப்பாகவும், இத்தீர்ப்பையே விசாரணைக்குழு நூற்றுக்கணக்கான பக்க அறிக்கையில் தெரிவிக்கவும் போகின்றது.

இலங்கையில் தமிழர் மீது இழைக்கப்பட்ட அநீதிகளை விசாரிக்க சன்சோனிக் கமிஷன் உட்பட பல விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருப்பினும் அவையாவும் அரசதரப்பைநியாயப்படுத்தும் விசாரணைகளாகவே இருந்தன; அத்தோடு அண்மையில், சிறிலங்காவின் விசாரணைக்குழு தீர்ப்பிற்கு பிரெஞ்சு வைத்தியக் குழுவான எம். எஸ். எப். நிறுவன வைத்தியர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பான தீர்ப்புகள் சிறந்த எடுத்துக்காட்டாகும். இத்தாக்குதல் தொடர்பான விசாரணைக்குழுவின் அறிக்கை தாக்குதல் நடந்தவுடன் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் வெளியிட்ட அறிக்கையை பிரதி செய்தது போன்று இருந்தது. பிரெஞ்சு வைத்திய குழு எவ்வளவு ஆதாரங்கள் காட்டியும் விசாரணைக்குழு அதனைக் கண்டு கொள்ளவில்லை.

அதேவேளை பிரெஞ்சு வைத்தியக்குழு மீதான தாக்குதல் தொடர்பான விசாரணையை மேற்கொண்ட ஆணையாளர் விமானிகளுக்கு தொலை நோக்கு கண்ணாடிகள் வழங்கப்பட வேண்டும் என அரசாங்கத்திற்கு சிபார்சு செய்துள்ளார்; இரண்டாயிரம் அடி உயரத்தில் இருந்து பார்த்து அடையாளம் காண கண்ணாடி அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது; இதேபோன்று, கொக்கட்டிச்சோலை படுகொலைச் சம்பவத்தை ஆராயும் விசாரணைக் குழுவினர் இராணுவத்தினருக்கு பூதக்கண்ணாடிகள் வழங்கினால் மக்களை அடையாளம் காண உதவியாக இருக்கும் என சிபார்சு செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் சிறிலங்கா நீதி விசாரணைக் குழுவின் தீர்ப்புகள் அந்தளவிற்கு விசித்திரமானவை.

# அறவழிப் போர் வெற்றிதராது
# 1961-ன் அனுபவப்பாடம் இது

- அரசர்

தமிழீழ தேசியப் போராட்ட வரலாற்றில் முதன் முறையாகக் கொண்டாடப்படும் முத்தமிழ் விழாவின் ஐந்தாம் நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தேசியத் தலைவர் வே. பிரபாகரன் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் மாமனிதர்களுக்கான தமிழீழ தேசிய விருதுகளை வழங்கினார். கலைத்துறையில் ஆற்றிய சேவைக்காக ஈழத்து நாடகத்துறை முன்னோடிகளில் ஒருவரான திரு. திருநாவுக்கரசு அவர்களுடன் உரையாடிய போது கிரகித்துக்கொண்ட விடயங்களை இங்கே உங்கள் முன்வைக்கிறோம்.

பிரதியாக்கம் செய்பவர், ஒப்பனைக் கலைஞர், அரங்க அமைப்பாளர், நடிகர்கள் எனப் பல்வேறு தரப்பினரதும் கூட்டு உழைப்பின் பெறுபேறாகவே ஒரு நாடகம் உயிர்பெறுகிறது எனக் கூறும் திரு அரசர் அவர்களை அவரது புகைப்படப் பிடிப்பு நிலையத்தில் சந்தித்தேன். அண்மையில் அவருக்கு கிடைத்த தமிழீழ தேசிய விருது குறித்து மனம் திறந்து பாராட்டும் நண்பர்கள் சிலருடன் உரையாடிக் கொண்டிருந்தார் திரு. அரசர் அவர்கள்.

ஈழநாதம் வாசகர்கள் சார்பாக சந்திக்க வந்துள்ளேன் என்றதும் தமது மூக்குப் பொடி டப்பாவை எடுத்து பொடியை உறிஞ்சியபடியே தயாராகினார். எமது உரையாடல் ஆரம்பமாகியது.

தமிழீழ தேசிய விருது பெற்றமைக்கான எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு, கலைத்துறையில் தாங்கள் ஈடுபட்டு உழைக்கும் போது வெளிப்படுத்திய பிரதான நோக்கங்கள் எத்தகையனவாக இருந்தது என்றேன்.

தமிழாராய்ச்சி மாநாட்டிற்காக வையத்துள் தெய்வம் என்ற நாடகத்தை அரங்கேற்றிய போதும் சரி, 'திப்பு சுல்தான்' அகில இலங்கை ரீதியாகப் பரிசு பெற்ற போதிலும் சரி, நாவலர் நூற்றாண்டு விழாவிற்காக 'நல்லை நகர் நாவலர்' அரங்கேற்றிய போதும் சரி அல்லது தமிழரசுக் கட்சிக்காக 'தமிழன் கதை', 'வீர மைந்தன்' போன்ற நாடகங்களை அரங்கேற்றியபோதும் எனக்கென்று சில அடிப்படை நோக்கங்கள் இருந்தன. இன எழுச்சி, தீண்டாமை ஒழிப்பு, சீர்திருத்தங்கள் போன்றவற்றை வலியுறுத்தும் அம்சங்கள் எமது படைப்புக்களில் இடம்பெறச் செய்தோம். இதன் மூலமாக இக் கருத்துக்களை மக்கள் மத்தியில் காவிச் சென்றோம்.

உங்களுடைய அரசியல் ஈடுபாடுகள் பற்றிக் கூற முடியுமா?

ஆரம்பத்தில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியுடன் ஒத்துழைத்தேன். பின்னர் தமிழரசுக் கட்சியின் அங்கத்தவனாகி உழைத்தேன் ஆனால் 1961 ஆம் ஆண்டின் சத்தியாக்கிரகத்தில் ஏற்பட்ட தோல்வியின் பாதிப்புகள் சில படிப்பினைகளை ஏற்படுத்தியது.

திட்டமில்லாத தலைவர்கள் - பயிற்றப்படாத தொண்டர்கள் - என்பவற்றுடன் எண்ணிக்கையில் சிறுபான்மையினராகிய எமது இனம் அறவழிப் போராட்டத்தின் மூலம் வெற்றிபெறுவது சாத்தியமல்ல என்றே உணர்ந்தேன். ஈ. வே. குமரையா போன்றோருடன் கொண்ட தொடர்பு காரணமாக தீவிரவாத சிந்தனைகளுக்கு உட்பட்ட போதும் அவை செயலாக்கம் பெறவில்லை.

நாடகத்துறையில் நீங்கள் ஈடுபாடு கொள்ளக் காரணமாக இருந்தது தொழில்துறை முயற்சியா? அல்லது கலை யார்வமா? என என் அருகிலிருந்த நண்பர் ஒருவர் வினவிய போது அமைச்சூர் நாடகக் கலைஞன் என்றே கொள்ளலாம் எனக் கூறிய அவர், அதனாலேயே பல்வேறு பரிசோதனை முயற்சிகளை மேற்கொள்ள முடிந்தது என விளக்கினார்.



தற்போது நாடகத்துறை சார்ந்து என்ன முயற்சியில் ஈடுபட்டுள்ளீர்கள் என வினவினேன்.

க. சிதம்பரநாதன் நெறிப்படுத்தும் உயிர்பெற்ற மனிதர்களின் கூத்து என்னும் நவீன நாடகத்திற்குள்ளது ஒத்துழைப்பையும் நல்கி வருகிறேன். குறிப்பாக ஒப்பனையில் கவனம் செலுத்துகிறேன் என்றார் திரு. அரசர் அவர்கள்.

# மாமனிதர் திருநாவுக்கரசு

அரசய்யா, அரசண்ணை எஸ் ரி. அரசு என நாடக உலகில் அறியப்படும் திரு. எஸ். திருநாவுக்கரசு ஒரு பல்துறை சார்ந்த ஆளுமை மிக்க ஒரு மனிதர் அடக்கமான சுபாவமும் நேர்த்தியான வாழ்வும், தான் வாழும் சூழலின் உணர்வுகளை மதித்து நடக்கும் தன்மையும் கொண்ட ஒரு பண்பாளர்; ஒரு சிறந்த நாடக நெறியாளர், ஒப்பனையாளர், அரங்கவிதானிப்பாளர் வேடஉடுப்புவிதானிப்பாளர் சிற்பி, ஒளிப்படவியலாளர், நாடக திரைப்பட நடிகர், வில்லுப்பாட்டுக்கலைஞர் மற்றும் ஒரு அரசியல் தொண்டன் எனும் பல்வேறு பரிமாணங்களை தன்னகத்தே கொண்டு விளங்கும் அரசு ஒரு இராணுவ வீரனாகவும், சிறை அதிகாரியாகவும், பெருந்தெருத்திணைக்கள உதவி மேற்பார்வையாளராகவும் பணியாற்றியவர்;

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் 6 ஆம் வகுப்பு வரை மட்டுமே கல்வி கற்க முடிந்த அரசர் குடும்ப வறுமை காரணமாக பரம்பரை வைத்தியத் தொழில்பழகத் தொடங்கினார். ஆனால் இயல்பான கலைநாட்டம் காரணமாக சிற்பத்தொழில் பழகினார் தமிழ்நாட்டின் விருதுநகர் அம்மன் கோயிலில் தனது சிற்பக்கலையைப் பயின்ற காலத்தில் 2 ஆம் உலகப் போரில் படை வீரனாக 4 வருடம் கடமையாற்றினார். நாடகத்துறையில் திரைஇழுப்போனாக நுழைந்தார். சுண்டிக்குளி V.C பரமானந்தம் குழுவில் நடிகரானார். நாடகவியலின் பல்வேறு அம்சங்களான, நடிப்பு, ஒப்பனை, வேட உடுப்பு அரங்கவிதானிப்பு நெறியாள்கை ஒளியமைப்பு போன்றவற்றை கற்றுக் கொண்டு 'வீரமைந்தன்' எனும் நாடகத்தை முதன்முதலில் நெறியாள்கை செய்தார்.

1959 இல் தொடர்ச்சியான பல மேடைகளைக் கண்ட வீரமைந்தன் நாடகம் "தமிழ் ஈழம் மலரட்டும்" என நிறைவு பெறுகிறது. கலையரசு சொர்ணலிங்கம் எஸ். ரீ அரசின் நெறியாள்கையைப் பாராட்டியிருந்தார். தொடர்ந்து 'வீரத்தாய்,' 'தமிழன் கதை,' சங்கிலியாதப்பா, 'இடிந்த கோயில்' முதலியவற்றைத் தயாரித்தார். 'திப்புசுல்தான்' நாடகம் அரசரை தேசிய ரீதியில் சிறந்த நாடக நெறியாளராக இனங்காண வைத்தது. வரலாறு இயற்பண்புவாத தோற்றம் அவ்வக்கால ஆடையணிகள், ஒப்பனை அரங்க விதானிப்புகளுடன் அரங்கேற்றப்பட்டது திப்புசுல்தான்'.

பாடசாலை நாடகங்களை ஊக்குவித்த வைகிங்ஸியம் இன்றும் நாடக எழுத்தாளர்களால் நினைவு கூரப்படுகின்றது. 'சொக்கன்' எழுதிய 'சவரிஞ்சிய காவலன்,' 'ஞானக் கவிஞன்,' 'சுப்பிய காமிகள்' 'தெய்வப்பாவை' போன்ற வரலாற்று இலக்கிய நாடகங்களில் உயிர்ப்புடன் கூடிய கதாபாத்திரங்களை அரங்கில் கொண்டிருந்தார்; இதற்கு அவரது சிற்பக்கலையறிவும் அனுபவமும் ஆற்றலும் உதவின என்றால் மிகையாகாது என்பார் சொக்கன். த வேலுப்பிள்ளையின் 'சைலொக்' 'சிவாஜி,' 'ஒதெல்லோ' ஆகியவற்றை நெறியாள்கை செய்தார். மானிப்பாய் இந்து, பரமேஸ்வரா, யாழ் இந்து மாணவர்களுக்கு நாடகம் பழக்கினார்.

குழந்தை ம. சண்முகலிங்கம் எழுதிய 'வையத்துள் தெய்வம்' என்ற திருவள்ளுவர் கதையை அடிப்படையாகக் கொண்ட நாடகத்தை நெறியாள்கை செய்த அரசு நவீன ஒளியமைப்பு உதவி கொண்டு வள்ளுவர் இயல்பான மரம் ஒன்றின் கீழ் அமர்ந்து இருக்கும் காட்சி ஒன்றை சிலைட் (Slide)இல் வடித்த மரம் ஒன்றை ஒளியினால் சைக்கிளோடிராமாவில் (பின்திரை) வீழ்த்தி உருவாக்கினார். ஒரு படப்பிடிப்பாளனான அரசு அவரது கமராபார்வை காரணமாக அரங்கில் கதாபாத்திரங்களை உலவவிடும்போது அதில் தனி ஒரு கலைத்துவம் துலங்கும் என்கிறார் குழந்தை ம. சண்முகலிங்கம். தேரோட்டி மகன்' நாடகத்தில் நானும் அரசரும் அருச்சுனன் பாத்திரத்தை மாறிச் செய்ததை நினைவு கூரத்தக்கது என்பார்.

வடஇலங்கை நாடக மன்றத்தயாரிப்பான 'பூதத்தம்பி'யில் அன்ரனி அமறால் ஆக நடித்தமை மிகுந்த போற்றப்பட்டது. அரியாலை சரஸ்வதி

(3 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலின்பின் இல. அகதிகள் திருப்பி அனுப்பப்படுவர்

## கொழும்பில் இந்திய இராஜதந்திரி

(கொழும்பு)

தமிழ் நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியப்பொதுத் தேர்தலின் பின் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படவுள்ளார்கள். இத் தகவலை நேற்று முன்தினம் கொழும்பில் இந்திய ராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

சிறிலங்கா வெளியுறவுச் செயலர் பேர்னாட் திஸ்ஸ ரெட்ணா தலைமையிலான குழு சமீபத்தில் டில்லி சென்றிருந்தபோதும் தமிழ் அகதிகள் பிரச்சினை விவாதிக்கப்பட்டது. அகதிகள் நாடு திரும்புவதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாகிய பிறகுதான் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று டில்லி வலியுறுத்தியதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

தென் இந்தியாவில் தற்சமயம் 2,00,000 தமிழ் அகதிகள் உள்ளார்கள். ஆனால் சிறிலங்கா அரசாங்கத்துக்குக் கிடைத்த தகவல்களின் படி மொத்தம் 1,15,000 அகதிகள் அங்குள்ளார்கள் என்று ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரெட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார். இந்த எண்ணிக்கையில் 90,000 பேர் 1990 ஜூன் மாதத்துக்கு முதல் அகதிகளாகத் தமிழ்நாடு சென்றவர்கள் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கண்காட்சி ஞாயிறுவரை நீடிப்பு

முத்தமிழ் விழாவையொட்டி யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்று வரும் சிற்ப ஓவியக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கண்காட்சியில் கோ. கைலாசநாதன், திரு இராதாகிருஷ்ணன், திரு ஞானகுருகுமரன், திரு இராஜன், செல்வி த. சுகுண, திருமதி அம்பலவாணர், செல்வி ஜெ. வாசுகி, செல்வி ே.ா பட்சி, செல்வி மு. ஜக்குலின் செல்வி நிஜுஜா, செல்வி சுப்பிரமணியம், செல்வி மதிவதனி, ஐ விசுவலிங்கம், திரு ஆ. துரைராஜா ஆகியோரது சிற்ப ஓவியப் படைப்புக்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## கொழும்பு

ஒரு தடவையில் நாற்பது நோயாளர்கள் வரையில் கொழும்பிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஆனால் இனிமேல் இருபத்தி ஐந்து நோயாளர்கள் மட்டுமே ஒரு தடவையில் அழைத்துச் செல்லப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு நோயாளர்களை அழைத்துச் செல்லும் கப்பலினுள் ஒரு சில வசதியீனங்கள் காணப்படுவதாகவும் இதனால் நோயாளரை வைத்துப்பராமரிக்க முடியாமலிருப்பதாகவும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் வசதியீனங்களை சுட்டிக் காட்டியுள்ளதைத் தொடர்ந்தே நோயாளரின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழகம்

25, கர்நாடகம் 12, மகாராஷ்டிரம் 15, ஒரிசா 20 ஆகும்.

இன்றைய தேர்தல் களத்தில் பிரதமர் சந்திரசேகர், சபாநாயகர் ரவிராய், பாரதீய ஜனதாக் கட்சியின் எல். கே. அத்வானி, வாஜ்பாய், இந்திரா காங்கிரஸ் பிரமுகர்கள் அந்துலே, ராஜேந்திரகுமார் வாஜ்பய், ஜனதாதளப் பிரமுகர் சரத்யாதவ், ராமகிருஷ்ணஹெக்டே ஆகியோர் போட்டியிடும் முக்கிய அரசியல் தலைவர்கள் ஆவர்.

கடந்த மூன்றுஆண்டுகாலத்தில் இரண்டாவது தடவையாகத் தேர்தலைச் சந்திக்கும் தமிழ்நாட்டில் இன்று வாக்களிப்பு நடைபெறுகிறது. மூன்றாவது கட்ட வாக்கெடுப்பில் முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி, செல்வி ஜெயலலிதா, வாழப்பாடி ராமமூர்த்தி, த. பாண்டியன் முதலானோர் போட்டியிடும் தொகுதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெறும்.

தமிழ்நாட்டில் 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ் 28 தொகுதிகளிலும், ஜனதா தள் 5 தொகுதிகளிலும், அ இ அ தி மு.க 11 தொகுதிகளிலும், திராவிட முன்னேற்றக் கழகம் 29 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன.

# ரஷ்யாவின் தலைவராக பூரிஸ் எல்சின் தெரிவானார்

(மொஸ்கோ)

ரஷ்யக் குடியரசின் தலைவராக பூரிஸ் எல்சின் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார். அறுபது சதவிகித வாக்குகளைப் பெற்று அவர் தேர்தலில் வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்ட வாக்கெடுப்பு இன்றி நேரடியாக ரஷ்யக் குடியரசின் தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டது வரலாற்றில் இதுவே முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ரஷ்யக் குடியரசின் தலைவராக எல்சின் தேர்ந்தெடுக்கப்பட்டதை பாராட்டி அமெரிக்கா அறிக்கையொன்று வெளியிட்டுள்ளது. எல்சின் தேர்ந்தெடுக்கப்பட்டதை தாம் வரவேற்பதாகவும், அவர் அடுத்த வாரம் வாஷிங்டன் வருவார் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## பூரிஸ் எல்சின் அமெ பயணம்

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ரஷ்ய சமஷ்டி ஜனாதிபதி பூரிஸ் எல்சின் அடுத்த வாரம் அமெரிக்கா செல்லவுள்ளார். அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்திக்கவிருக்கும் இவர் தன்னாட்சி பெறுவதற்கு சோவியத் குடியரசுகள் நடத்தும் போராட்டத்திற்கு அமெரிக்காவின் ஆதரவைக் கோருவார்.

# நிவாரண விநியோகத்திற்கு பழுதடைந்த அரிசி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு நிவாரணத்திற்கென அரசினால் தரம் குறைந்த அரிசி அனுப்பப்பட்டுள்ளது. கடந்த இருவாரங்களுக்கு முன்னர் 9 ஆம் 10ஆம் கட்டங்களுக்கு உலர் உணவு விநியோகத்திற்கென அனுப்பப்பட்ட அரிசியே இவ்வாறு பழுதடைந்திருந்ததாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை வெற்றுச் சாக்கு இல்லாமையால் கிளிநொச்சிக்கு மேற்படி அரிசியை அனுப்பமுடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உரம், அரிசி ஆகியன கொண்டுவரப்பட்ட பொதிகள் பழுதடைந்துள்ளமையால் இவற்றைக் கொண்டு செல்வதற்கு புதிய பொதியமைப்பு செய்ய வேண்டும் எனவும் அதற்கு தேவையான சாக்குகள் இல்லையெனவும் அதனாலேயே கிளிநொச்சிக்கான நிவாரணப் பொருள்களையும் உரத்தையும் அனுப்பமுடியாதிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ச)

## 17 வயதில்

விழாவை எதிர்த்து எழுபத்தியிரண்டிலேயே கிளர்ந்தெழுந்தவர் எமது தலைவர் பிரபாகரன். எமது தலைவரும், சாவகச்சேரி திசைவீரசிங்கமுமாகச் சேர்ந்து 72ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27ஆம் திகதி களியாட்டவிழா மேடைமீது வெடிகுண்டுகளை வீசினர். அப்போது எமது தலைவருக்கு 17 வயது. அந்த வயதிலேயே எமது தலைவர் தமிழ்ப்பண்பாட்டுச் சிதைப்பை எதிர்த்து களத்தில் இறங்கினார். குண்டேற்றினார் என்ற செய்தி பலருக்குத் தெரியாமல் இருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

மேலும், அவர் பேசுகையில், நீண்டகாலமாக அடிமைப்பட்டுக் கிடந்ததால் புதிதாக எமது கலைகள் வளர, இலக்கியங்கள் உருவாக வாய்ப்பில்லாமல் போய்விட்டது என்றார். மண்மீட்புப் போரில் இயக்க வீரர்கள் ஈடுபட்டிருப்பது போல எமது போராட்டத்தைப் பற்றிய இலக்கியங்களையும் போராட்ட உணர்வை வெளிப்படுத்தும் கலைப்படைப்புக்களையும் எமது மக்களுக்கு வழங்க வேண்டியது எமது கலைஞர்களினதும், இலக்கியவாதிகளினதும் கடமை எனக் கேட்டுக்கொண்டு தமது உரையை நிறைவு செய்தார்.

## கடலில்

போராளிகளின் விபரம் வருமாறு:

★ மேஜர் டேவிற் (கிறிஸ்தோப்பர் அன்ரனி மரியதாஸ், பாஷையூர் குடியேற்றம், பொலிகண்டி)

★ லெப் கரிகாலன் (சிதம்பரப்பிள்ளை சுரேஸ், வரணி வடக்கு, வரணி)

★ லெப்: ரமணன் (பாண்டியன் சுந்தரதாஸ், திருமலை)

★ 2வது லெப். ரவி (சபாபதி தயாபரன், மட்டக்களப்பு)

★ 2வது லெப். மாணிக்கம் (சண்முகநாதன் கஜேந்திரன், வட்டுக்கோட்டை)

★ 2வது லெப். சோகின் (சதாசிவம் நடராசா, மட்டக்களப்பு)

★ வீரவேங்கை புலவர் (சிறி ஆனந்தகுரு சியாமளன், வல்வெட்டித்துறை).

## சடலங்களை மறைப்பதில்

மும் இராணுவத்தினரின் முற்றுகையில் உள்ளமையால் சரியான விபரங்கள் இன்னமும் கிடைக்கப் பெறவில்லை என்பதோடு, இறந்தவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்ட சடலங்களை இராணுவத்தினர் அழித்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் இறந்தவர்களின் சடலங்களை முழுமையாகப் பெறமுடியாதுபோனாலும் பெயர்ப் பட்டியலைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிய வருகின்றது.

கடந்த புதன்கிழமை நண்பகல் 12 50 மணி தொடக்கம் வியாழக்கிழமை காலைவரை கொக்கட்டிச் சோலையில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மகிழடித்தீவு, முனைக்காடு, பண்டாரியாவெளி, முதலைக்குடா கொக்கட்டிச்சோலை ஆகிய கிராமங்களைச்சுற்றிவளைத்து இப்படுகொலைகளை நிகழ்த்தினர்.

இப்படுகொலைச் சம்பவத்தின்போது ஆறு ஆசிரியைகள் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதாக ஏ. எவ். பி செய்தி ஸ்தாபனத்தை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. மேலும் ஆறு மாதக்குழந்தைகள் ஆறு பேரும் இக்கொலையுண்டவர்களில் அடங்குவர்.

அதேவேளை அரைகுறையாக எரியுண்ட நிலையில் பல குழந்தைகள் அரைகுறைஉயிருடன் மீட்கப்பட்டுள்ளதாகவும். அவர்கள் தண்ணீர், தண்ணீர் எனஅலறுவதுமனதைஉருக்கும் காட்சியாகவுள்ளதாகவும் ஏ எவ். பி. செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

## ராணுவத்தினரின்

ழ்ப் பொதுமகனொருவர் கொல்லப்பட்டதுடன் இளம் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மூன்று மணியளவில் நடந்துள்ளது. அன்றைய தினம் மன்னாரிலுள்ள தாராபுரம் என்ற இடத்திற்குத் தேங்காய் எடுக்கச் சென்ற பொதுமக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இச்சம்பவத்தின்போதே ஐந்து பிள்ளைகளின் தந்தையான நீக்கிலஸ் (வயது 42, பட்டித்தோட்டம் மன்னார்) என்பவர்சுட்டுக்கொல்லப்பட்டவராவர். இதில் ஒருபிள்ளையின் தாயான அ. தங்கம்மா (வயது 32, தொச்சிக்குளம்,மன்னார்) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ்வீரவேங்கைகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## 8ஆம் நாள்

கரிக்கப்பட்டிருந்தது. மைதானத்தின் மேற்குத்திசையில் பிரமாண்டமாக அமைக்கப்பட்ட மேடையின் முகப்புத்தோற்றத்தில் திருவள்ளுவரின் வர்ணப் படம் வைக்கப்பட்டு புலிக்கொடி ஒன்றும் உயரப் பறந்துகொண்டிருந்தது. மேடையின் வலது பக்கத்தில் விளக்குகளினால் "முத்தமிழ் விழா" என்று பெரியளவில் பொறிக்கப்பட்டிருப்பது விழாவுக்கு உயிரோட்டத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தது.

விடுதலைப்புலிகளின் மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு. அரவிந்தன், திரு. மருசாலப்பா ஆகியோர் மங்கள விளக்கை ஏற்றிவைக்க நேற்றைய எட்டாம் நாள் முத்தமிழ்விழா ஆரம்பமாகியதும் கானமூர்த்தி பஞ்சமூர்த்தி குழுவினரின் மங்கள இசை திரண்டிருந்த மக்களின் செவிப்பறைகளைச்சென்றடைந்தன.

தொடர்ந்து விழாவுக்குத் தலைமை தாங்கிய விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் சுப்பிரமணியன் அவர்கள் தலைமை உரை நிகழ்த்தினார். தொடர்ந்து யாழ். மாவட்டத் துணைத் தளபதி திரு. கஸ்ரோ, விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பிரமுகர் திரு. பாலகுமார், விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு யோகி, ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து முத்தமிழ் மலர் வெளியீடு இடம்பெற்றது. மலரின் முதல் பிரதியை திரு. சுப்பிரமணியம் அவர்கள் யாழ் மாவட்டத் தளபதி திரு. தினேஷ் அவர்களிடம் வழங்கினார்.

முத்தமிழ் மலரின் வெளியீட்டு உரையை ஈழத்துச் சிவானந்தன் அவர்கள் நிகழ்த்தினார். தொடர்ந்து முத்தமிழ் மலரை ஆக்குவதற்கு உதவியவர்களுக்கு திரு. பாலநடராஜன் அவர்கள் நன்றி தெரிவித்து உரைநிகழ்த்தினார்.

தொடர்ந்து கவியரங்கம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. (க)

## ஒருவர் பலி

இராமநாதபுரம் எரிபொருள் நிலையம் அருகில் ஏற்பட்ட வெடிகுண்டு விபத்தில் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டதாக வெரித்தாஸ் வானொலி நேற்றிரவு அறிவித்தது.

## கொலைகளை

லெப். ஜெனரல் ஹமில்டன் வனிகசூரியாவைப் பாதுகாப்பு அமைச்சு பணித்துள்ளது.

அதேவேளை கொக்கட்டிச் சோலையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படும் என சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இதற்கென விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

## வேலணை வடக்கு திருமதி கந்தையா செல்லாச்சி

வேலணை வடக்கு சோளாவத்தையைச் சேர்ந்த திருமதி கந்தையா செல்லாச்சி 14.06 91 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற அம்பலாங்கொடை வர்த்தகர் திரு க. கந்தையா அவர்களின் துணைவியாரும், குழந்தைவேலு (அம்பலாங்கொடை வர்த்தகர்), நடராஜா (ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதிகள் பூம்பாவை, சமளாம்பிகை ஆகியோரின் மாமியாரும், சரவணநாதன், திருமதி சரோஜா சிவானந்தன், ஜெயநாதன், வனஜா, சிவநாதன், இரவீந்திரன், மகேந்திரன், புவீந்திரன், குகேந்திரன், இந்திரகலா, திருமதி பாலசொரூபி சரவணநாதன், சிவானந்தன் ஆகியோரின் பேர்த்தியும், சஜன், அஜாமினன், ஜனாதனன் ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான திருமதி பாக்கியலெட்சுமி நாகநாதர், சுப்பிரமணியம், வேலுப்பிள்ளை ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, அரசடி வீதி, 47 ஆம் இலக்கத்தில் உள்ள அன்னாரது பேரன் சரவணநாதனின் இல்லத்தில் 15.06.91 சனிக்கிழமை நடைபெற்று, பகல் 3.00 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

47, அரசடி வீதி,
வண்ணார்பண்ணை,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
க. குழந்தைவேலு (மகன்)

(R - 1462)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 61 ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.